**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220621

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான பதிலளிப்பு நடிவடிக்கையாக மேலதிக 5.75 மில்லியன் டொலர்களை அறிவிக்கும் அமெரிக்கா.**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்க அரசாங்கம் புதிய நிதியளிப்பின் மூன்றாவது பகுதியினை இன்று அறிவித்தது. மொத்தத்தில் 5.75 மில்லியன் டொலர் பெறுமதியான இம்மனிதாபிமான உதவியானது, நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பண உதவி, குறுகிய கால தொழில்கள் மற்றும் விதைகள் போன்ற விவசாயப் பொருட்கள் ஆகியவற்றை நேரடியாக வழங்கும்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக வழங்கப்படும் இப்புதிய மானிய நிதியளிப்பானது, பொருளாதார நெருக்கடியின்போது இலங்கையர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட USAID ஊடாக வழங்கப்படும் 6 மில்லியன் டொலர் பெறுமதியான மானியம் மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (DFC) ஊடாக வழங்கப்படும் 120 மில்லியன் டொலர் பெறுமதியான புதிய கடன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைகின்றது.

“சர்வதேச நன்கொடையாளர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் விடுத்த வேண்டுகோளானது, இலங்கையில் ‘உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு பல்பரிமாண உணவுப் பாதுகாப்பு நெருக்கடி’ தொடர்பாக எச்சரித்தது,” என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் விளக்கினார். “இன்று நாங்கள் அறிவிப்புச்செய்யும் புதிய உதவியானது, அவ்வாறான சிக்கலான பிரச்சினைகளில் சிலவற்றைத் தீர்க்கும். இந்நெருக்கடியால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு இந்த நிதி நேரடியாகச் சென்றடைவதை உறுதிசெய்வதற்கு நாங்கள் கடுமையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.” என அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று அறிவிக்கப்பட்ட நிதியளிப்பானது பாரம்பரியமாக அதிக வறுமை விகிதங்களை அனுபவிக்கின்ற மற்றும் பொருளாதார நெருக்கடியால் விசேடமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களில்

உள்ள நுண்தொழில்முயற்சிகளுக்கும் உதவிசெய்யும். அதற்கு மேலதிகமாக, நெருக்கடிகளுக்குத் தயாராகவும், அவற்றிற்குப் பதிலளிக்கவும், இறுதியில் நெருக்கடிகளிலிருந்து மீளவும் சமூக அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுக்கு உதவிசெய்யும்.

இலங்கை மக்கள் தங்களது உடனடி மற்றும் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் வகையில் இலங்கையில் அமெரிக்கா ஏற்கெனவே மேற்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க முதலீடுகள் மற்றும் உதவிச் செயற்திட்டங்களை எதிர்வரும் மாதங்களில் மேலும் அதிகரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இம்முயற்சிகள் இலங்கையில் சுற்றுலா, சிறு வணிகங்கள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், காலநிலை இசைவாக்கம் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றைப் பலப்படுத்திய ஆறு தசாப்த காலமாக அமெரிக்க மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியுடைய வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் அமைகின்றன.

இலங்கையில் USAIDஇன் பணிகள் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு https://www.usaid.gov/sri-lanka எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.